10/=

பக்கங்கள் 06

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 119 வெள்ளிக்கிழமை செப்ரெம்பர் 15 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48



## முதலையின் தாக்குதலில் பிரிட்டன் ஊடகர் பலி

இலங்கைக்குச் சுற்றுலாவாக வந்திருந்த பிரிட்டன் ஊடகவியலாளர் ஒருவர் முதலையின் தாக்குதலால் உயிரிழந்துள்ளார்.

பிரிட்டன் பினான்சியல் டைம்ஸ் ஊடகவியலாளரான 24 வயதான, 06

# தியாக தீபம் திலீபனின் 30 ஆவது ஆண்டு நினைவேந்தல்

தியாகதீபம் லெப். கேணல் திலீபனின் 30 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வின் முதல்நாள் நிகழ்வு யாழ்.நல்லூரில் அமைந்துள்ள அவரது நினைவுத்தூபியிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் இன்று இடம்பெற்றது. இரு இடங்களிலும் இன்று காலை 10 அளவில் ஈகைச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. யாழ் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் மாணவர்கள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். நல்லூரில் இடம்பெற்ற நிகழ்வுக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன், ஜனநாயகப் போராளிகள் 06







### இலங்கையில் கொடூரங்கள் புரிந்தவர்களை

# தண்டிக்க வேண்டும்




இலங்கையில் பாரிய கொடூரங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டிய தேவை உள்ளதாக அமெரிக்க செனட் சபை தெரிவித்துள்ளது. இலங்கைக்கான நிதிஉதவியை 92 வீதத்தினால் குறைக்கும், டொனால்ட் ட்ரம்ப் அரசாங்கத்தின் திட்டத்தை நிராகரித்து, அமெரிக்க செனட் சபையின், ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கான உப குழு கடந்தவாரம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

“இலங்கை உள்ளிட்ட பல நாடுகளில், தடயவியல், மரபணுச் சோதனைகள் மூலம், பாரிய கொடூரங்களில் தொடர்புடைய குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டிய தேவை உள்ளது. எச்சங்களை அடையாளம் காணப்படுவதற்கு, மரபணுச் சோதனைகள் நடத்தப்பட வேண்டியுள்ளது. இலங்கை, சிரியா, ஈராக், கம்போடியா, 06

### பாதுகாப்பு ஒப்பந்தம்:

## வாய்திறக்க மாட்டோம்

### பாகிஸ்தான் உறுதி

கடந்த ஐந்து ஆண்டுகளில் இலங்கை உள்ளிட்ட 8 நாடுகளுடன், பாகிஸ்தான் பாதுகாப்பு உடன்பாடுகளைச் செய்து கொண்டுள்ளதாகப் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் குராம் டஸ்கிர் கான் தெரிவித்துள்ளார். எனினும், இலங்கையுடன் செய்து கொள்ளப்பட்ட பாதுகாப்பு உடன்பாடு, அதன் உள்ளடக்கம் பற்றிய விபரங்களைப் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் வெளியிடப் போவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் செனட் சபையில் உரையாற்றிய அவர், “கடந்த ஐந்து ஆண்டுகளில், இலங்கை, ரஷ்யா, சீனா, துருக்கி, பொஸ்னியா, கசாக்ஸ்தான், நோர்வே, ருமேனியா ஆகிய நாடுகளுடன் பாதுகாப்பு உடன்பாடுகளைச் செய்துள்ளது. பல்வேறு நாடுகளுடன் 17 புரிந்துணர்வு உடன்பாடுகள் செய்து கொள்ளப்பட்டுள்ளன.” என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

## பணிக்குச் செல்லாதவர்கள் பணி நீக்கம்

அத்தியவசிய மின்சார சேவையை வழங்குவதற்கு தேவையான இலங்கை மின்சார சபையில் சாதாரண அடிப்படை மற்றும் பயிற்சி அடிப்படையில் இருக்கும் அனைத்து ஊழியர்களும் இன்று காலை கட்டாயம் பணிக்கு சென்றிருக்க வேண்டும் என்று மின்சாரம் மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சு கூறியுள்ளது.

அவ்வாறு பணிக்குத் திரும்பியிராத சாதாரண அடிப்படை மற்றும் பயிற்சி அடிப்படையில் இருக்கும் அனைவரும் பணியில் இருந்து விலகியதாகக் கருதப்படுவர் என்று மின்சாரம் மற்றும் மீள்புத்தாக்கச் சக்தி அமைச்சு ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை மின்சார சபை ஊழியர்கள் சங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்ந்து இடம்பெறும் என்று அந்தச் சங்கம் கூறியுள்ளது. துறை சார்ந்த அமைச்சருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தையடுத்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (எ)

## மந்துவில் படுகொலை நினைவுநாள் அனுஷ்டிப்பு



புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதியில் கடந்த 1999ஆம் ஆண்டு இலங்கை விமானப் படையினரின் விமானத்தாக்குதலில் 24 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அவர்களின் 18ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று காலை 9.00 மணிக்கு மந்துவில் பகுதியில் நடைபெற்றது. வன்னிகுரோஸ் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பால் முன்னெடுக்கப்பட்ட இந்த நினைவேந்தல் நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (எ)

### அரச ஊழியர்களுக்கு

## சம்பள அதிகரிப்பு

அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டளவில் அவர்களுக்கான சம்பளம் பன்மடங்காக அதிகரிக்கும் என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

இதன்படி விசேட வைத்திய நிபுணர்களின் அடிப்படைச் சம்பளம் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவாகவும் சாதாரண சாரதி ஒருவரின் அடிப்படைச் சம்பளம் 28 ஆயிரம் ரூபாவாகவும் அதிகரிக்கும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க 2020 இல் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு மேலதிகமாக 30 பில்லியன் ரூபாவை அரசாங்கம் ஈட்ட 06

# போராட்டத்துக்கு தடை!

மியான்மாரில் முஸ்லிம்கள் பெரும் துன்பங்களுக்கு முகங்கொடுத்துள்ளனரென வும் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகை யில் தௌஹீத் ஜமாஅத், கொழும்பில் ஏற் பாடு செய்யப்பட்டிருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட் டத்துக்கு, நீதிமன்றம் தடைவித்துள்ளது.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடத்தப்படவிருந்தது.

அந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கான தடையுத்தரவை, கொழும்பு பிரதான நீத வான் நீதிமன்றம், நேற்றுப் பிற்பகல் பிறப் பித்தது. கொழும்பு பிரதான நீதவான் லால் ரணசிங்ஹ பண்டாரவால், இந்தத் தடையுத்தரவு, தௌஹீத் ஜமாஅத் அமைப் பின் எஸ்.எம். அஸ்மீருக்கு பிறப்பிக்கப்பட் டது. (உ)

# யாழ். சர்வதேச திரைவிழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம் சர்வதேசத் திரைப்பட விழா இன்று ஆரம்பமாகிறது. யாழ் பல் கலைக்கழக நுண்கலைப் பீடமும், ஹற் றன் நஷனல் வங்கியும் அரங்க அனுசரணை யாளர்களாக இணைந்து கொள்ளும் இந்த திரைப்படவிழா எதிர்வரும் 20ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறவுள் ளது. சுமார் 25 நாடுகளைச் சேர்ந்த நூற் றுக்கு மேற்பட்ட திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன. இவற்றில் சர்வ தேச விருது பெற்ற உள்நாட்டு வெளி நாட்டுத் திரைப்படங்களும் அடங்கு கின்றன. யாழ் சர்வதேசத் திரைப்பட விழாவை அஜன்டா-14 என்ற நிறுவனத் துடன் இணைந்து, தேசிய ஒருமைப்பாட் டுக்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவல கம், சிலோன் தியேட்டர்ஸ் நிறுவனம் ஆகியவை ஏற்பாடு செய்துள்ளன.

விழாவின் நிறைவு தினத்தில் திரைத் துறை சார்ந்த சாதனையாளர்களுக்கும், சிறந்த படைப்புகளுக்கும் விருது வழங்கப்பட வுள்ளதுடன் , இலங்கையின் தலைசிறந்த இயக்குநர்களில் ஒருவரான தர்மசேன பத் திராஜா வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார். (உ)

# கைக்குண்டுடன் ஒருவர் கைது



பிலியந்தலை - வெவல பகுதியில் கைக்குண்டுடன் ஒருவர் கைதுசெய் யப்பட்டுள்ளார். பொலிஸ் விஷேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய மேற்கொள் ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போதே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளதாக, பொலிஸார் குறிப்பிட்டுள் ளனர்.

மேலும், சந்தேகநபர் பயணித்த முச்சக்கர வண்டியும் இதன்போது பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள் ளது. சந்தேகநபர் பிலியந்தலைப் பகுதி யைச் சேர்ந்த 44 வயதான ஒருவர் எனத் தெரியவந்துள்ளது. இவரை இன்று கெஸ்பேவ நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளைப் பிலியந்தலை பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(உ)

# இராணுவப் பாடசாலைக்கு இராணுவத் தளபதி விஜயம்



திருகோணமலை இராணுவப் படைச் செயற்பாட்டுத் திட்டமிடல் பாடசாலைக்கு இராணுவத் தளபதி லெப்டி னன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க விஜயம் மேற்கொண்டார். இப்பாடசாலை புனரமைக்கப்பட்டதன் பின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் இந்திரஜித் வித்யானந்தவின் அழைப்பையேற்று நேற்று சென்றிருந்த இராணுவத்தளபதிக்கு இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்பளிக்கப்பட்டது. (உ)

# இன்று உலக ஜனநாயக தினம்




உலக ஜனநாயக தினம் இன்றாகும். இதனை முன்னிட்டுத் தேர்தல்கள் ஆணைக் குழு ஜனநாயகம் பற்றியும் சர்வஜன வாக் குரிமை பற்றியும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச் சித் தொடரை ஏற்பாடு செய்துள்ளது.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலங் கள் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலை வர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

ஜனநாயகத்தின் ஆதாரம் வாக்குரி மையே. சர்வஜன வாக்குரிமையைப் பாது காப்போம் என்ற தொனிப்பொருளில் சகல மாவட்டங்களிலும் விழிப்புணர்வு திட்டங்கள் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வினை முன்னிட்டு சுவ ரொட்டிகள், பதாகைகள் என்பவற்று டன் வீதி நாடகங்கள், சொற்பொழி வுகள் மற்றும் ஊர்வலங்களும் நடத்தப் படவுள்ளன. (உ)




# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழில் துறைசார் வல்லுநர்க ளுக்கு முன்கற்கை அங்கீகார முறைமை மூலம் தேசியத் தொழில் தகைமைச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. தேசிய பயிலுநர் மற் றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர், எஸ்.ஏ.எம். சலீம் மௌலானா தலைமையில் மட் டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்த நிகழ்வு நேற்று நடை பெற்றது. (உ)

# பெண் அபிவிருத்தி உதவியாளர்கள் மகளிர் விவகாரங்களுக்கு நியமனம்

மகளிர் விவகாரத் திட்டமிடல் மற்றும் ஆலோசனைகளை வழங் குவதற்காக பிரதேச செயலக மட் டங்களில் பெண்கள் அபிவிருத்தி உதவியாளராக நியமிக்கப்படுவார் கள் என்று பிரதமர் ரணில் விக் கிரமசிங்க தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டம், அரச கொள்கை என்பன பற்றி அரசாங்க அதிகாரிகளுக்கு விளக் கமளிக்கும் கலந்துரையாடல் நிகழ்வில் பிரதமர் இவ்வாறு தெரி வித்தார். இது தொடர்பில் பிர தமர் மேலும் தெரிவிக்கையில்,

சிறு வர்த்தக அபிவிருத்தி யின் போது பெண்களுக்கு வழங் கக்கூடிய ஒத்துழைப்புக்கள் பற்றிக் கவனம் செலுத்தப்படும் என்று நம்பிக்கை வெளியிட் டார்.

அபிவிருத்திப் பணிகளுக்கா கத் தனியார் முதலீடுகளை மேம் படுத்த அரசாங்கம் திட்டமிட் டுள்ளது. இதன் போது பிரதேச மட்டத்திலான சிறு வர்த்தகங்களை மேம்படுத்துவது பற்றிக் கவனம் செலுத்தப்படும் என்றும் பிரத மர் குறிப்பிட்டார். (உ)

# வடக்கில் காற்று எச்சரிக்கை

நாட்டில் குறிப்பாக வடக்கு, வட மத்திய , வடமேற்கு மாகாணங்கள் மற் றும் நாட்டைச் சுற்றியுள்ள கடற்கரை யோரப் பிரதேசங்களில் நாளை முதல் பலத்த காற்றுவீசக்கூடும் என்று வளி மண்டலவியல் திணைக்களம் எச்சரித் துள்ளது. வடமாகாணத்தில் மணிக்கு சுமார் 40 தொடக்கம் 50 கிலோமீற்றர் வேகத்தில் பலமான காற்று வீசக்கூடும். அத்துடன் மழையும் பெய்ய வாய்ப்புள் ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கு, சப்ரகமுவ, மத்திய மாகா ணங்கள் மற்றும் காலி மாத்தறை மாவட் டங்களில் ஓரளவு மழை பெய்யும். ஊவா மாகாணம் மற்றும் அம்பாறை, மட்டக் களப்பு மாவட்டங்களின் சில இடங்க ளில் பிற்பகல் 2.00 மணியின் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று திணைக்களம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப் பிட்டுள்ளது. (உ)

# நீர் வழங்கல் அமைச்சருடன் பேச்சு



மத்திய மாகாண முதல மைச்சர் சரத் ஏக்கநாயக்க மற்றும் நகரத்திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச் சர் ரவூப் ஹக்கீம் இடை யில் சந்திப்பு இடம்பெற் றது.

மத்திய மாகாணசபைக் குட்பட்ட பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கில் நேற்று முதலமைச்சர் அலுவலகத் தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது. கண்டியிலுள்ள பாடசாலைகளில், குறிப்பாகச் சித்திலெப்பை மகா வித்தியா லயத்தில் நிலவும் பௌதீக வளப்பற்றாக்குறை மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை என் பவற்றுக்கு விரைவில் தீர் வைப் பெற்றுக்கொடுப்பதற் கான நடவடிக்கைகள் குறித்து இதன்போது ஆரா யப்பட்டன. (உ)

# இந்தியாவில் முதலாவது புல்லட் ரயில் 2023 இல்!

ஜப்பான் நாட்டின், 88 ஆயிரம் கோடி ரூபா கடனுதவியுடன், இந்தியாவின் முதல் புல்லட் ரயில் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்று நடந்தது.

ஜப்பான் பிரதமர் ஷின்சு அபே, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் இந்தத் திட்டத்தை நேற்றுத் தொடக்கி வைத்தனர்.

நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது:

“இந்தப் புல்லட் ரயில் ஒரு மணித்தியாலத்தில் 350 கிலோமீற்றர் வேகத்தில் செல்லக்கூடியது. இந்தத் திட்டத்தால் வேலை வாய்ப்பு, வருமானம் என்பன கிடைப்பது டன், சர்வதேச வர்த்தகமும் நமக்குக் கிடைக்கும். இந்த ரயில், பயண நேரத்தைக் குறைப்பதுடன், மக்களிடையே தூரத்தையும் குறைக்கிறது. இதனால், சாலைகளில் கார்களின் எண்ணிக்கை குறையும். அதனால் சுற்றுச்சூழல் மாசுபடுவது குறையும்.

இந்த புல்லட் ரயில் திட்டம், 1.10 லட்சம் கோடி ரூபா செலவில் அமைக்கப்பட உள்ளது. இதற்கு, 88 ஆயிரம் கோடி ரூபாயை, 0.1 சதவீத வட்டியுடன் வழங்க ஜப்பான் முன்வந்துள்ளது.

இந்தப் புல்லட் ரயில் திட்டம், இந்தியாவுக்கு, ஜப்பான் அளித்துள்ள பரிசு. முதலாவது புல்லட் ரயில் 2023 ஆம் ஆண்டு சேவையில் ஈடுபடும்” என்றார். (இ)





# கின்னஸ் மணற்கோட்டை

உலகின் மிக உயரமான மணற் கோட்டையைக் கட்டி ஜேர்மன் மணற் சிற்பக்கலைஞர்கள் சாதனை படைத்துள்ளனர். ஜேர்மனியைச் சேர்ந்த சுற்றுலா நிறுவனமொன்று, டஸ் பெர்க் நகரில் மணற்சிற்பம் ஒன்றை அமைக்க முடிவு செய்தது.

விளம்பரத்துக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் மணற் சிற்பக் கலைஞர்கள், 16.68 மீற்றர் உயரம் கொண்ட கோட்டையைக்கட்டினர். சுமார் 3500 தொன் எடை கொண்ட இந்த மணற்கோட்டையை ஆய்வு செய்த அதிகாரிகள் கின்னஸ் சாதனைச் சான்றிதழ் வழங்கியுள்ளனர்.

இதன்மூலம் உலக அமைதியை வலியுறுத்தி இந்தியாவின் சுதர்சன் பட்நாயக் என்பவரால் அமைக்கப்பட்ட 14.84 உயர மணற் கோட்டையின் சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது. (இ)



# பாக். படைகள் ஊடுருவல்

## இந்தியச் சிப்பாய் பலி

இந்தியாவின் ஜம்மு -காஷ்மீரில் நேற்று நள்ளிரவு பாகிஸ்தான் இராணுவம் இந்திய எல்லைக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்தியுள்ளது.

இரவோடிரவாக இந்தியப் பகுதிக்குள் நுழைந்த பாகிஸ்தான் படைகள், பின்புறமாகச் சுற்றி வளைத்து இந்திய இராணுவ நிலைகள் மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்தின. இந்த எதிர்பாராத தாக்குதலில் நிலை குலைந்த இந்திய இராணுவத்தினர் தற்காப்பு போரில் இறங்கினர். அதன் பின்னர் மேலதிக இந்தியத் துருப்புகள் அங்கு வருவதற்கிடையில்பாகிஸ்தான்படைகள் இந்தியப் பகுதியை விட்டு வெளியேறி விட்டன.

இந்தச் சமரில் இந்தியச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த பிரிஜேந்திர பகதூர் சிங் என்ற சிப்பாயே பலியானதாக இந்திய இராணுவம் அறிவித்துள்ளது.(இ)

# வையுங்கள் முற்றுப்புள்ளி



மியான்மரில் ரோஹிங்கியா முஸ்லிம்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு ஆங் சாங் சூகியிடம் கனடாப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ காட்டமாகக் கூறியுள்ளார்.

மியான்மரில் ரோஹிங்கியா முஸ்லிம்கள் மீது கொடூரமான தாக்குதல்கள் நடந்து வருகின்றன, இதனால் சுமார் 6 லட்சம் பேர் அகதிகளாகப் பங்களாதேஷில் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்த நிலையில் மியான்மர் நாட்டின் நடைமுறைத் தலைவராகவும், அரசின் ஆலோசகராகவும் உள்ள ஆங் சாங் சூகியை கனடாப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

ரோஹிங்கியா முஸ்லிம்கள் மீது நடத்தப்படும் அடக்கு முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டதுடன், தனது கவலையையும் வெளிப்படுத்தியுள்ளார். இந்த நிலையில் நாட்டின் நிலை குறித்து ஆங் சாங் சூகி மக்களிடம் விரைவில் உரையாற்றுவார் எனத் தெரிகிறது. (இ)

# ஜப்பானுக்கு மேலாக மீண்டும் ஏவுகணை

## கெத்துக் காட்டும் வடகொரியா



உலக நாடுகளின் எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாமல், வடகொரியா இரண்டாவது முறையாகவும் ஜப்பானுக்கு மேலாகக் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையைப் பரிசோதித்துள்ளது. இதனால் மீண்டும் கொரியத் தீபகற்பத்தில் பதற்றநிலை உருவாகியுள்ளது.

சில நாட்களுக்கு முன்னர் ஜப்பான் வான்பரப்பை ஊடறுத்து, வடகொரியாவின் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை பறந்து சென்று கடலில் வீழ்ந்தது. இதனால் அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் வடகொரியாவுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தன. ஐ.நா சபையில் மிகக் கடுமையான பொருளாதாரத்தடையும் வடகொரியா மீது விதிக்கப்பட்டது.

இது வடகொரியாவுக்குக் கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. பல்வேறு தரப்பில் இருந்து எதிர்ப்பு எழுந்தாலும் தன்னுடைய போக்கில் இருந்து வடகொரியா மாறவில்லை.

இப்போது வடகொரியா இரண்டாவது முறையாக ஜப்பான் வழியாகக் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை வீசியுள்ளது.

வடகொரியா கிழக்கு நோக்கி ஜப்பானுக்கு மேற்பகுதியில் ஏவுகணையை வீசியுள்ளது எனத் தென்கொரியாவும், ஜப்பானும் தெரிவித்துள்ளன. “வடகொரியாவின் ஆபத்தான நடவடிக்கைகளைச் சகித்துக்கொள்ள மாட்டோம். இந்த வழியிலே வடகொரியா தொடர்ந்து பயணம் செய்தால், அதற்குப் பிரகாசமான எதிர்காலம் என்பது கிடையாது,” என எச்சரிக்கை விடுத்துள்ளார் ஜப்பானியப் பிரதமர் ஷின்சு அபே. அமெரிக்காவின் குவாம் தீவு மீதான தாக்குதல் ஒத்திகையாகவே வடகொரியாவின் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனை அமைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (இ)

# இலையில் தொங்கிய குழந்தைக் கண்ணன்

கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு 3 வயதுக்குழந்தை ஒன்றை சுமார் இரண்டரை மணிநேரம் இலையில் கட்டி வைத்துள்ள புகைப்படம் வெளியாகிப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

யாதவர்களின் பண்டிகையான கிருஷ்ண ஜெயந்தியின் போது, கேரளாவின் கண்ணூர்ப் பகுதியில், 3 வயதுக் குழந்தையைக் கிருஷ்ணர் போன்று அலங்காரம் செய்து செயற்கையான அரசமர இலையில் கட்டி வைத்துள்ளனர். ஒரு வாகனத்தின் உதவியுடன் அரச இலையைக் கட்டி, அதில் இந்தக் குழந்தையை அந்தரத்தில் கட்டித் தொங்க விட்டுள்ளனர். சுமார் இரண்டரை மணிநேரம் இந்தக் குழந்தை இலையில் தொங்கியபடி இருந்துள்ளது.

இந்த காட்சியை ஒரு பெண்மணி புகைப்படம் எடுத்து தனது பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். “ முதலில் நான் அது கண்ணனின் சிலை என்று நினைத்தேன், ஆனால் சிறிது நேரம் கழித்து அந்தக் குழந்தையின் கால்கள் லேசாக அசைந்தன, அதன் பின்னர் தான் தெரியவந்தது அது உண்மையான குழந்தை என்று. நான் இது குறித்து அருகில் இருப்பவர்களிடம் விசாரித்தேன், ஆனால் யாரும் எவ்வித பதிலும் அளிக்கவில்லை ” எனக் கூறியுள்ளார். இது குறித்துப் பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (இ)





# விலகல்

இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி 5 போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடவுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது போட்டி சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ.சிதம்பரம் மைதானத்தில் நாளை மறுதினம் (ஞாயிற்றுக் கிழமை) பகல்-இரவு மோதலாக நடைபெறவுள்ளது.

இந்நிலையில், முதல் மூன்று ஒரு நாள் போட்டிகளுக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டது. 16 பேர் கொண்ட இந்த அணியில் இடம் பிடித்திருந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ஷிகர் தவான் நேற்று திடீரென விலகினார்.


அவரது மனைவி ஆயிஷா, உடல்நலம் பாதிக்கப்பட்டிருக்கிறார். இதையடுத்து அணியிலிருந்து தன்னை விடுவிக்கும்படி இந்தியக் கிரிக்கெட் சபையைக் கேட்டுக் கொண்டார். அதை கிரிக்கெட் சபையும் ஏற்றுக்கொண்டுள்ளது.

31 வயதான ஷிகர் தவான், ஏற்கனவே இலங்கைக்கு எதிரான கடைசி ஒரு நாள் போட்டி மற்றும் இருபது-20 கிரிக்கெட் போட்டிகளில் தாயாருக்கு உடல் நிலை சரியில்லாதமையால் விளையாடவில்லை. அதன் தொடர்ச்சியாகத் தற்போது ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடக்க ஆட்டங்களில் விளையாட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

தவானுக்குப் பதிலாக மாற்று வீரர் எவரும் அறிவிக்கப்பட வில்லை.

அவருக்குப் பதிலாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக ரஹானே ஆடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ஆரோன் பிஞ்ச் பயிற்சியின்போது காயமடைந்துள்ளார். வலது பின்னங்காலில் காயமடைந்துள்ள அவர், முதலாவது ஒரு நாள் போட்டியில் ஆடுவது சந்தேகம் தான். தொடரிலிருந்து அவர் விலகுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக ஆஸ்திரேலிய அணி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)



# தாயும் சேயும்

அமெரிக்க நட்சத்திர டென்னிஸ் வீராங்கனையான 35 வயதான செரீனா வில்லியம்ஸ் 23 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற சாதனையாளர் ஆவார். அவர் அமெரிக்கத் தொழிலதிபர் அலெக்சிஸ் ஒஹானியனைக் காதலித்துத் திருமண நிச்சயதார்த்தம் செய்து கொண்ட பின்னர் ஒன்றாக வாழத் தொடங்கினார்.

பின்னர் கர்ப்பம் காரணமாகப் போட்டிகளில் விளையாடாமல் இருந்தார். இந்நிலையில், கடந்த முதலாம் திகதி அவருக்குப் பெண் குழந்தை பிறந்தது.

எனினும், குழந்தையின் புகைப்படங்கள் எதையும் வெளியிடாத அவர், தற்போது இரண்டு வாரங்கள் கழிந்துள்ள நிலையில், தனது குழந்தையின் புகைப் படத்தை சமூக வலைத்தளத்தில் முதல் முறையாக வெளியிட்டிருக்கிறார்.

குழந்தைக்கு அலெக்சிஸ் ஒலிம்பியா ஒஹானியன் ஜூனியர் என்று பெயர் சூட்டியிருப்பதாகவும் கூறியுள்ள செரீனா, குழந்தை 3.11 கிலோ இருந்ததாகவும் கூறியிருக்கிறார்.

ஆனால் குழந்தை பிறப்பில் அதிக சிரமம் இருந்ததால் 6 நாட்கள் வரை வைத்தியசாலையில் தங்கியிருக்க வேண்டி இருந்ததாகவும் அதில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும், கர்ப்ப காலம் முதல், குழந்தை பெற்றதுவரையிலான வீடியோத் தொகுப்பு ஒன்றையும் அவர் வெளியிட்டிருக்கிறார். (ஐ)



# 'பிக்பாஸ்' வீட்டில் யாஷிகா ஆனந்தன்

தமிழ்த் தொலைக் காட்சிகளில் தற்போது முதன்மை நிகழ்ச்சியாக அனைவர் மத்தியிலும் இடம்பிடித்திருப்பது 'பிக்பாஸ்' நிகழ்ச்சி.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காகப் பலர் ஆவலாக இருக்கும் நிலையில், இந்த நிகழ்ச்சியில் பங்கேற்குமாறு அழைப்பு வந்தபோது நிராகரித்த, நடிகை ஒருவர் தற்போது அடுத்த தடவை தான் அதில் பங்கேற்பார் எனத் தெரிவித்துள்ளார்.

'துருவங்கள் பதினாறு' படத்தில் நடித்த யாஷிகா ஆனந்த்தான் இப்படிக் கூறியுள்ளார்.

சமீபத்தில் அவர் அளித்த ஒரு பேட்டியில்,

"எனக்கு 'பிக் பாஸ்' நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு வந்தது. ஆனால் நான் ஏற்றுக் கொள்ளவில்லை. நான் நிச்சயம் இரண்டாவது நிகழ்ச்சியில் கலந்துகொள்வேன்" எனக் கூறியுள்ளார். (ஒ)

# 'ஏ'களை அள்ளிய ஹர ஹர மகாதேவகி



சந்தோஷ் இயக்கத்தில் கவுதம் கார்த்திக், நிக்கி கல்ராணி நடிப்பில் உருவாகி இருக்கும் 'ஹர ஹர மகாதேவகி' படத்துக்குத் தணிக்கைக்குழுவில் எதிர்பார்த்த சான்றிதழ் கிடைத்திருக்கிறது.

எதிர்வரும் 29ஆம் திகதி வெளியாகவுள்ள இப்படம், தணிக்கைக் குழுச் சோதனைக்கு அனுப்பப்பட்டது. இதன்படி இப்படத்துக்கு 'ஏ' சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. (ஒ)



# தாய்லாந்துக் காடுகளில் கும்கி-2

பிரபு சாலமன் இயக்கத்தில் உருவான 'கும்கி' வெற்றிப்படமாக அமைந்தது. இதில் விக்ரம்பிரபு, லட்சுமி மேனன் ஆகியோர் அறிமுகமானார்கள். பின்னர் 'கயல்', 'தொடரி' படங்களை இயக்கினார்.

தற்போது மீண்டும் 'கும்கி' படத்தின் 2ஆவது பாகத்தை பிரபுசாலமன் இயக்கி வருகிறார். இதில் 'ரா ரா ராஜசேகர்' படத்தில் நடித்த மதி கதாநாயகனாக நடிக்கிறார். இவர் இயக்குநர் லிங்குசாமியின் சகோதரியின் மகன். மதியின் ஜோடியாக நடிகர் ராஜசேகர்-ஜீவிதா தம்பதியரின் மகள் ஷிவானி நடிக்கிறார்.

இதன் படப்பிடிப்புக் கடந்த வாரம் தாய்லாந்தில் தொடங்கியது. அங்குள்ள அடர்ந்த காடுகளில் யானைக் கூட்டங்களுடன் படமாகி வருகிறது. இதுவும் யானையை மையமாகக் கொண்ட படமாகும்.

எனவே, படப்பிடிப்பை அங்கு தொடங்கியிருக்கிறார்கள். யானைகள் தொடர்பான அனைத்துக் காட்சிகளையும் படமாக்கிய பிறகு இந்தியா திரும்புகிறார்கள்.

உச்சக்கட்டக் காட்சிகளும் தாய்லாந்துக் காடுகளிலேயே படமாக்கப்படுகிறது. சுகுமார் ஒளிப்பதிவு செய்யும் இந்தப் படத்துக்கு நிவாஸ் கே.பிரசன்னா இசை அமைக்கிறார். (ஒ)

# நட்பின் இலக்கணம்



உலகப்புகழ் பெற்ற பாடகர்களில் ஒருவர் செலினா கோம்ஸ். இவரது பாடல்கள் கோடிக்கணக்கில் ஹிட்ஸ் அள்ளுவது ஒருபுறம் இருக்க, சமூக வலைத்தளங்களில் செலினா கோம்ஸ் வெளியிடும் புகைப்படங்கள் குறைந்தபட்சம் 5 முதல் 10 மில்லியன் லைக்குகள் பெற்றுவிடும். இவர் எந்த அளவுக்குப் பிரபலம் என்பதை இதன் மூலமே கணிக்கமுடியும்.

இந்நிலையில் அவர் சமீபத்தில் சிறுநீரக மாற்று அறுவைசிகிச்சை செய்து கொண்டதாகத் தெரிவித்துள்ளார். அவரது நெருங்கிய தோழியான நடிகை பிரான்சியா ரைசாதான் இவருக்கு சிறுநீரகத்தை அளித்துள்ளார்.

'இதுதான் உண்மையான நட்பு' என சமூக வலைத்தளங்களில் அவருக்குப் பாராட்டுகள் குவிந்து வருகின்றன. (ஒ)

# மைத்திரிக்கு எதிராக வழக்கு





சீல் துணி விநியோகித்த விவகாரம் தொடர்பில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியுமாயின், அதேபோன்று தற்போதைய ஜனாதிபதி தொடர்பிலும் நடவடிக்கை எடுக்க முடியும் என, பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். தற்போதைய ஜனாதிபதி தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்குச் சொந்தமான நிதியை முஸ்லிம் விவகார ஊக்குவிப்புக்காக 65 மில்லியன் ரூபா, பௌத்த சாசன மறுமலர்ச்சி நிதியாக 100 மில்லியன் ரூபா, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைக்க 5000 மில்லியன் ரூபாய் என, வழங்க உத்தரவிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அது முன்னெடுக்கப்படுவது தேர்தல்களுக்காக அல்ல எனவும் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார். அதேபோன்று, மகிந்த ராஜபக்சவும் சீல் துணி விநியோகத்தை மேற்கொண்டமையும் தேர்தலை இலக்கு வைத்து அல்ல எனவும் அவர் கூறியுள்ளார். (உ)

# காகங்களுக்கு செய்மதியில் ஜனாதிபதி வாழ்த்து

இலங்கை இராணுவத்தினரால் தொடர்ச்சியாக எட்டாவது தடவையாக ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் கூட்டுப்போர்ப்பயிற்சி நடவடிக்கையான "கடல் காகம் 2017" (தியகாவா) போர்ப் பயிற்சிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை குச்சவெளிப் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற போர்ப் பயிற்சியினை தனது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து செய்மதி தொழில்நுட்பத்தினூடாகப் பார்வையிட்ட ஜனாதிபதி "கடல்காகம்" யுத்தப் பயிற்சியில் இணைந்து கொண்டுள்ள உள்நாட்டு, வெளிநாட்டு பாதுகாப்பு உறுப்பினர்களுக்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். முன்னதாக ஜனாதிபதி திருகோணமலைக்கு நேரடியாகச் சென்று பார்வையிடவுள்ளதாக அரச ஊடகம் செய்திவெளியிட்டிருந்தது. எனினும் தவிர்க்கமுடியாத காரணத்தினால் செய்மதி ஊடாக போர்ப்பயிற்சியை ஜனாதிபதி பார்வையிட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## இன்றைய கருத்தோவியம்




# கஞ்சா வளர்த்தவர் கந்தளாயில் கைது



கன்தளாய், சீனித் தொழிற்சாலைக்குப் பின்புறமாகவுள்ள வீடொன்றில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கஞ்சாச் செடிகளை வளர்த்த, அவ்வீட்டின் உரிமையாளர், நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளாரென, அக்போபுர பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தளாய், அக்போபுர, 85ஆம் கட்டை பகுதியைச் சேர்ந்த எஸ்.அமரசிங்க (45 வயது) எனபவரே, இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கந்தளாய்ப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, அவ்வீட்டுக்குப் பின்புறமாக உள்ள பகுதியைச் சோதனை செய்த போது, சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கஞ்சாச் செடிகள் நாட்டப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். (உ)

# மண்சரிவு எச்சரிக்கை நீடிப்பு



நான்கு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று பெய்த மழை காரணமாக களுத்துறை, இரத்தினபுரி, காலி, மாத்தறை, கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் ஏராளமான வீதிகள் நீரில் மூழ்கின. தற்போது களுகங்கை மற்றும் அத்தனகல்ல ஓயாவிலும் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

ஆகவே தாழ்நிலப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையப் பிரதி பணிப்பாளர் பிரதீப் கொடிபிலி தெரிவித்துள்ளார்.

காலி, களுத்துறை, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் அறிவிக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடரும் அமுலில் உள்ளது. மண்சரிவு அபாயம் ஏற்பட்டால் உடனடியாக மக்கள் அப்பகுதியில் இருந்து வெளியேற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (உ)

# தேசிய விபத்துத் தடுப்பு வாரம் பிரகடனம்



எதிர்வரும் 18ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரை விபத்துத் தவிர்ப்பு வார நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

பொலிஸாரின் துணையுடன் சுகாதார அமைச்சு தொற்றா நோய் தடுப்புப் பிரிவு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது. விபத்துக்களை இயன்றளவு குறைப்பது இதன் நோக்கமெனத் தொற்றா நோய்ப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் திலக் சிறிவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர், ஆண்டொன்றில் பத்தாயிரம் பேர் வரை விபத்துக்களால் உயிரிழப்பதாகத் தெரிவித்தார்.

விபத்துக்களில் காயமடைந்தோருக்குச் சிகிச்சை அளிக்க அரசாங்கம் பெருந்தொகைப் பணத்தை செலவிடுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (உ)

# 36,000 மில்லியனில் யான் ஓயா திட்டம்

வட மத்திய மாகாணத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பாரிய நீர்த்தேக்கத் திட்டமான யான் ஓயா நீர்த்தேக்கத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் தற்போது துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

36,000 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் இந்நீர்த்தேக்கத்தின் நீர்க் கொள்ளளவு 140,000.00 சதுர அடிகளாகும். வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைத்து நிர்மாணிக்கப்படும் யான் ஓயா திட்டத்தின் இடது, வலது கால்வாய்களின் ஊடாக 28 சிறிய மற்றும் பெரிய குளங்களிற்கு வழங்கப்படும். மேலும் 4000 ஏக்கர் புதிய வயற்காணிகள் அபிவிருத்தி செய்யப்படுவதுடன், பதவியாக் குளத்தின் மூலமாக தற்போது ஒரு போகம் மாத்திரம் பயிர்ச்செய்கை செய்யப்படும் .8000 ஏக்கரில் பெரு போகம், சிறு போகம் ஆகிய இரு போகங்களிலும் பயிர் செய்கையை மேற்கொள்ளக்கூடியவாறு அபிவிருத்தி செய்யப்படும். (உ)

# கொழும்பில் சர்வதேச புத்தகக் கண்காட்சி

கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில்இன்று ஆரம்பமாகியது.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி வரை இக்கண்காட்சி நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சி நிகழ்வுகளில் எதிர்க்கட்சித் தலைவர் இரா சம்பந்தன், கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

இந்தப் புத்தக கண்காட்சியை 19 ஆவது வருடமாகத் தொடர்ந்து இலங்கைப் புத்தக வெளியிட்டாளர் சங்கம் ஏற்பாடு செய்கிறது. இதில் உள்நாட்டு மற்றும் சர்வதேச புத்தக வெளியீட்டு நிறுவனங்கள், விநியோக நிறுவனங்கள் அடங்கலாக 400க்கு மேற்பட்ட அமைப்புக்களின் காட்சிக் கூடங்கள் நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# திருகோணமலையில் விபத்து

திருகோணமலையில் இன்று காலை 10 மணியளவில் முச்சக்கர வண்டிகள் இரண்டு, ஒன்றோடு ஒன்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. இதில் நால்வர் பலத்த காயங்களுடன், திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளன ரெனப் பொலிஸார் தெரிவித்தனர். (உ)

## நாளை நாளும் கோளும்

16.09.2017 சனிக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆவணி மாதம் 31 ஆம் நாள்

ஏகாதசி பி.ப. 4.56 வரை | பூசம் பி.இ. 02.13 வரை | சித்தயோகம், மரண யோகம், ஏகாதசி விரதம்

இராகுகாலம் 09.03 - 10.33 | சுபநேரம் 03.03 - 04.33 | எமகண்டம் 03.33 - 03.03

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிம்மதி | கவனம் | வரவு | ஏமாற்றம் | புகழ் | ஊக்கம் | உதவி | மறதி | அசதி | பெருமை | ஆக்கம் | போட்டி |

எதிரொலி
Ethiroli

# அந்த நாள் ஞாபகம்.....!



## 1987.09.15

இலங்கைக்குள் உள்நுழைந்த இந்திய அமைதிப் படைக் கெதிராக திலீபன் நீராகாரம் இன்றி உண்ணாநோன்பைத் தொடங்கினார்.

# மயானங்களை அகற்றகோரி யாழில் ஆர்ப்பாட்டம்



குடியிருப்புக்களுக்கு மத்தியில் உள்ள மயானங்களை அகற்றக்கோரி இன்று யாழ்ப்பாணத்தில் இருவேறு இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் முன்பாகவும் நண்பகல் 12 மணியளவில் கைதடியிலுள்ள முதலமைச்சர் அலுவலகத்துக்கு முன்பாகவும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. யாழ்ப்பாணத்தில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் அமைந்துள்ள மயானங்களை அகற்றுமாறு கோரியே சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன. இதேவேளை புத்தூர் மேற்கு கிந்துசிட்டி மயானத்தினை அகற்றுமாறு கோரி அப் பகுதி மக்கள் கடந்த 64வது நாட்களாக சத்தியாக்கிரகப் போராட்டதில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-04)

# விமானப் படையினருக்கு பரவும் மர்மக் காய்ச்சல்

## ஒருவர் பலி

தியத்தலாவவில் உள்ள, விமானப் படையினரின் பயிற்சி முகாமில் திடீரென வைரஸ் காய்ச்சல் பரவியுள்ளது. சுமார் 20 க்கும் மேற்பட்ட வீரர்கள் இந்தப் புதியவகையான காய்ச்சலால் பீடிக்கப்பட்டதால், பயிற்சிக்குச் சென்றிருந்த படைப் பிரிவினர் தற்காலிகாகமாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

நோய்த் தொற்றுக்கு உள்ளான விமானப் படைவீரர்கள் மருத்துவ சிகிச்சையின் பொருட்டு தியத்தலாவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட விமானப்படை வீரர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

எனினும் அவரது மரணத்துக்கான உண்மையான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை என்று வைத்தியசாலைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# காலியில் ஒதுங்கிய விநோதப் பொருள்

காலிக் கடற்கரையில் ஒதுங்கிய வித்தியாசமான ஒருவகை விநோதப் பொருளினால் அந்தப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அடையாளம் காணமுடியாத குறித்த பொருள், காலிக் கடற்கரையிலிருந்து சிறிது தூரத்தில் அலைமோதிக்கொண்டிருந்த நிலையில் நேற்று மாலை மீனவர்களால் கைப்பற்றப்பட்டது

4 அடி நீளமான, மஞ்சள், கறுப்பு வர்ணங்கள் கொண்ட இந்த விநோதப் பொருளின் ஏனைய பாகங்கள் கடலுக்குள் மூழ்கியிருப்பதாக மீனவர்கள் கூறினர். இது விமானமொன்றின் பாகமாக இருக்கலாம் எனப் பரவலாக நம்பப்படுகிறது. (ஆ)

# கண்ணிவெடியகற்ற ஜப்பான் நிதியுதவி

வடக்கில் புதைக்கப்பட்டிருக்கும் நிலக் கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு ஜப்பான் அரசாங்கம் நிதி உதவி வழங்கவுள்ளது. இதற்காக 190 மில்லியன் ரூபாவை இலங்கைக்கு வழங்குவதற்கு ஜப்பான் முன்வந்துள்ளது.

நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் நிறுவனங்களின் மூலம் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. இலங்கையில் இடம்பெற்ற போரின் போது பல இடங்களில் நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. போர் முடிவடைந்த நிலையிலும் இன்றும் வடக்கின் சில பகுதிகளில் நிலக் கண்ணி வெடிகள் அகற்றப்படாமல் இருப்பதையும், மக்கள் அச்சத்தின் மத்தியில் இருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது. பொதுமக்களுக்குச் சொந்தமான இடங்களிலும் இவ்வாறு நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருப்பதால் அந்தப்பகுதிகளில் மக்கள் குடியேற முடியாமல் பல இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். இந்த நிலையிலேயே, மக்களின் இயல்பு வாழ்வை மீளக் கட்டியெழுப்பும் வகையில் , வடக்கிலுள்ள நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு ஜப்பான் முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## இலங்கையில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்சால்வடோர், குவாடமாலா ஆகிய நாடுகளில், தடயவியல் அடையாளம் காணும் நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. இந்த நாடுகளில், இடம்பெற்ற மனித குலத்துக்கு எதிரான, மனித உரிமைகளுக்கு எதிரான ஏனைய மீறல்களுக்குப் பொறுப்பானவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தும், நீதித்துறை விசாரணைகள், தேவைப்படுகின்றன. எனவே, இலங்கைக்கு ஒட்டுமொத்த நிதி வெட்டையும் ஏற்க முடியாது, நிதியளிப்பதற்கு இலங்கைக்கு நிபந்தனைகளை விதிக்கலாம்" என்றும் அமெரிக்க செனட் உப குழு தெரிவித்துள்ளது. (எ)

## தியாக தீபம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் தலைவர் சி.வேந்தன் உட்பட பொதுமக்கள் பலரும் அஞ்சலி செலுத்தினர். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த தியாகதீபம் லெப். கேணல் திலீபன் வடக்கு கிழக்கில் இந்திய அரசு மேற்கொண்டிருநத ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடினார். ஆயுத வழியற்று அகிம்சை வழியே 5 அம்சக் கோரிக்கையை முன்வைத்து நீராகாரமின்றி 12 நாட்கள் உண்ணாவிரதமிருந்து கொள்கைக்காக உயிர் நீத்தார். (எ-01,04)

## முதலையின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போல் மக்லீன் ( Paul McClean) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக பட்டதாரியான போல் மக்லீன், கடந்த சில நாட்களுக்கு முன்னர் சுற்றுலாவாக இலங்கைக்கு வந்துள்ளார். ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த மக்லீன், நண்பர்களுடன் வெளியில் சென்றுள்ளார். அப்போது நேற்று மாலை 3.15 மணியளவில் அவருக்கு இயற்கை உபாதை ஏற்பட்டதால், அருகிலிருந்த ஏரிக்குச் சென்று, கைகளைக் கழுவ முயன்றுள்ளார்.

இதன்போது, திடீரென அவரை முதலையொன்று தாக்கி, இழுத்துச் சென்றுள்ளது. அவர் இயற்கை உபாதையால், ஏரிக்கு வந்ததால் தூரத்தில் இருந்த நண்பர்கள் நடந்த விபரீதத்தைக் கவனிக்கவில்லை. பின்னர் அந்தப் பகுதி மீனவர்கள், ஒருவரை முதலை இழுத்துச் செல்வதைக் கண்டு தகவல் கொடுத்தனர். அப்போதே மக்லீன் காணாமல் போன விடயம் தெரியவந்தது. இந்த நிலையில் பொலிஸாரும், இராணுவத்தினரும் வரவழைக்கப்பட்டு தேடுதலில் ஈடுபடுத்தப்பட்டனர். இன்று காலை அவரது உடல் ஆழமான சேற்றுப்பகுதியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.(அ)

## அரச ஊழியர்களுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியுள்ளது என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். கொழும்பு மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள், அபிவிருத்தி அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் தொடர்பில் அறிவுத்தும் நிகழ்வு அலரி மாளிகையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (எ)

**TECHNO WORLD**
**A/L தொழில்நுட்பப் பிரிவு**

A/L 2017

இல் செயல்முறைப் பரீட்சைக்கு (Practical Exam) தோற்றும் தொழில்நுட்ப பிரிவு மாணவர்களுக்கான விசேட தொடர்ச்சியான செயலமர்வு.

**பொறியியல் தொழில்நுட்பம் (E-TEC)**

**எதிர்வரும் 16 மற்றும் 17ஆம் திகதிகளில்**
(வெலிங்டன் சந்தி, புதிய லிங்கம் கூல்பார் அருகாமை)

பிரபல ஆசிரியர் ஜெகநாதன் - இயந்திரவியல் (Auto mobile)
சேரலாதன் (தொழில்நுட்ப பீடம்) - உற்பத்தி தொழில்நுட்பம்
சிவஜனன் (தொழில்நுட்பக்கல்லூரி) - குடிசார் தொழில்நுட்பம்
பானுஜன் (விரிவுரையாளர் தொழில்நுட்ப பீடம்) - நில அளவை
அருண்குமார் (J/MHC) - நில அளவை
நிரூபன் (தொழில்நுட்ப பீடம்) - நில அளவை
பிரசாந்தன் (தொழில்நுட்ப பீடம்) - Electrical & Electronics
புவிராஜ் (தொழில்நுட்ப பீடம்) - Electrical & Electronics

**உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் (BIO-TEC)**

திருக்குமரன் (J/NCC)
கலைதீபன் (J/NCC)
சசிகரன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
சாரங்கன் (K/KCC)
வினோத் (J/CHC)
விஷ்ணு (யா/ சிதம்பராக் கல்லூரி)
துர்க்காதீபன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)

**குறிப்பு**

- யாழ். பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட மாணவர்களின் விசேட கருத்தரங்கு இடம்பெறும்.
- அகில இலங்கை ரீதியாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முதலிடம் பெற்ற மாணவர்களின் கருத்தரங்கு இடம்பெறும்.
- 2017 பரீட்சையில் எதிர்பார்க்கப்படும் வினாக்கள் (விடைகளுடன்)
- கடந்த 2015, 2016 செயல்முறை வினாக்கள் விடைகளுடன் தரப்படும்.

**இன்றிலிருந்து முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.**

**077 017 5346**

C-9572)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 15.09.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.